**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 337 /2017

PW-1 24-10-2024

| | |
|---|---|
| Name | பொன்பாண்டி |
| Father's/Husband's Name | செல்லப்பாண்டி |
| Village | வேலோடுபட்டி |
| Taluk | எட்டயபுரம் |
| Caste | _ |
| Calling | டிரைவர் |
| Religion | _ |
| Age | 38 |

(Accused absent. Petition filed and allowed)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் தற்போது வேலோடுபட்டியில் வசிக்கிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன்.வழக்கில் இறந்துபோன கருப்பாயம்மாள் எனது பாட்டியாவார். வழக்கின் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள பொன்பாண்டி என்ற கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்தை 30.05.2017 தேதி என் பாட்டியை பேரிலோவன்பட்டியில் எனது பாட்டியை விட்டு வருவதற்காக நானும் எனது பாட்டியும் எனது அப்பாவும் சென்றிருந்தோம்.

2) இரவு 9.30 மணியளவில் நானும் எனது பாட்டியும் எனது அப்பாவும் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது சிங்கிலிபட்டி அருகில் செல்லும்போது எதிரே வந்த எதிரி அஜித்குமார் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் Head light போடாமல் எதிரி தலையில் பேட்டரியை கட்டிக்கொண்டு வெளிச்சத்தை பக்கவாட்டில் அடித்துக்கொண்டு வந்ததால் நான் அந்த பக்கமாகத்தான் வெளிச்சத்தை காட்டிக்கொண்டு இருக்கிறார்களோ என்று நினைத்து

சென்றுகொண்டிருந்தபோது எதிரி வேகமாக அவரது பைக்கில் வந்து நேருக்கு நேராக எனது வாகனத்தை இடித்து விட்டார்.

3) அதில் எனது இடது கை ஒடிந்துவிட்டது. எனது பாட்டிக்கு மண்டையில் அடிபட்டு காயம் ஏற்பட்டது. அவருக்கு முதுகிலும் அடிபட்டு கால் எலும்பு ஒடிந்துவிட்டது. அதன்பின்பு எனது தம்பி பரமசிவத்திற்கு போன் செய்து வரச்சொல்லி அரசு பேருந்தில் ஏறி விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன்பின்பு எங்களை தூத்துக்குடிக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். ஒருவாரம் கழித்து எனது பாட்டி 06.06.2017 தேதி இறந்துவிட்டார்.

4) நான் தனியார் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டேன். நான் ராஜேஷ்திலக் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது போலிசார் வந்து விசாரித்தார்கள் அப்போது நான் புகார்மனு எழுத முடியாத நிலையில் இருந்ததால் என் மனைவியிடம் சொல்லி எழுதி புகார்மனு கொடுத்தேன். அந்த புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார்மனு முழுவதும் அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சம்பவ இடத்திற்கும் எட்டயபுரம் காவல்நிலையத்திற்கும் இடையே 15 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகார்மனுவில் சம்பவத்தன்று எதிரி ஹெட்லைட் போடாமல் தலையில் டார்ச் லைட் கட்டிக்கொண்டு என்ற வாசகத்தை கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2)அதேபோன்று எதிரி நான் சென்ற இடது பக்கத்திற்கு எதிரே டார்ச்லைட் வெளிச்சத்தை பக்கவாட்டில் அடித்துக்கொண்டு வந்தார் என்ற வாசகத்தையும் புகார்மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) விளாத்திகுளம் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர் விசாரித்து காயத்தகவல் பற்றி சம்மந்தப்பட்ட காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் எங்களுக்கு சொந்தமான Splender இருசக்கர வா கனத்தில் 3 பேர் சென்றோம். 3 பேர் இருசக்கர வா கனத்தில் சென்றது சட்டப்படி தவறு என்றால் சரிதான்.

4) தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் நடந்த சம்பவம் பற்றி மருத்துவர்கள் விசாரித்தார்கள். அதே போன்று போலிசாரும் வந்து நடந்ததைப்பற்றி விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு எதிரியின் பெயர் மற்றும் விலாசம் தெரியாது என்றால் சரிதான்.

5) புகார்மனுவிலும் போலிசார் விசாரணையிலும் புகார்மனுவை நான் எழுத முடியாமல் இருந்தேன் என்றும் நான் சொல்ல சொல்ல என் மனைவி புகார்மனுவை எழுதினார் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

6) புகார்மனுவை சம்பவ மறுநாள் கொடுத்தேன். பேரிலோவன்பட்டி– சிங்கிலிபட்டி ரோடானது தார் ரோடு என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி சொன்னநேரத்தில் எந்த புகார்மனுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வேகமாக வந்தார் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நாங்கள் 3 பேரும் சட்டத்திற்கு புறம்பாக இருசக்கர வாகனத்தில் சென்றதாலும் எனது கவனக்குறைவாலும் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.